குன்னூர் அரசு மருத்துவமனை

* வினா எண் 475—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் அரசு மருத்துவமனையில் எக்ஸ்ரே பிரிவு ஒன்று துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் : குன்னூர் அரசினர் மருத்துவமனையில் ஒரு 100 எம். ஏ, எக்ஸ்ரே கருவி ஏற்கனவே பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது,

திரு. க. அரங்கசாமி: அங்கு எக்ஸ்ரே கருவி அமைக்கப்பட்டிருந்தாலும் இன்றுவரை அது சரிவர இயங்கவில்லை என்பதை அரசு அறியுமா? அதைச் சரிவர இயக்கும் முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : 1-1-78 முதல் 29-11-78 வரை 3107 எக்ஸ்ரே படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மாதத்திற்கு சராசரி 259 படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து அந்த இயந்திரம் சரியாக இயங்குவதாகத்தான் தெரிகிறது.

திரு. க. அரங்கசாமி : கடந்த மாதம் நானே அந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரத்தில் எக்ஸ்ரே படம் எடுக்கவேண்டுமென்று அழைத்துச் சென்று வோல்ட்டேஜ் குறைவாக இருக்கிறது என்று காரணம் சொல்லி எடுக்கவில்லை. இதுபோன்ற குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : வோல்டேஜ் குறைவது என்பது எல்லா இடத்திலும் மின்சாரத்தில் ஏற்படுகிற கோளாறுதான்; அது அந்த இயந்திரத்தின் கோளாறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை:

* வினா எண் 476—திரு. இரா. அமிர்தராஜ் ; மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், குலசேகரன்பட்டினத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவும் குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும்?

1979 மார்ச் 19]

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

Building for Veterinary Hospital at Kookal Union.

* Q. No. 477—THIRU SALEM M. ARUMUGAM : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the steps taken for the construction of a Veterinary Hospital at Kookal Union in Gudalur Assembly Constituency?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : கூக்கலில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்காக செயற் குறிப்பு ஏதும் பெறப்பட வில்லை. தற்போது கூக்கலிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கூடலூரில் கால்நடை மருந்தகம் ஒன்று செயற் பட்டு வருகின்றது.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : அங்கு உடனடியாக கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் திட்டம் இப்போது இல்லை யென்றாலும் அந்தப்பகுதி மலைவாழ் மக்களுடைய நலன்களைக் கருதி நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தியையாவது விட அரசு முன்வருமா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி ; இதுபற்றி அரசு ஆய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண்கள் 478, 479 அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

வினா-விடை நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் குறித்து.

திரு. சி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சனிக்கிழமை அன்று தமிழகத்தில் இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மேலும் மேலும் நலிந்து கொண்டிருக்கின்றன என்பதைக் குறித்து இந்த மன்றத்தில் அரைமணி நேர விவாதம் வேண்டுமென்று உங்களிடத்தில் நோட்டீஸ் கொடுத்தி